பொலன்னறுவை பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலன்னறுவை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொலன்னறுவை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சிமன்ற நிறவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்றங்களுக்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமிண்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறை கணக்கு நியமத்தின் 02 அத்தியாயத்தின் ஈ.ஜி 2.7 மூலதன செலவினை விடயத்திற்காக மானியங்கள் ஒரே ஒரு தடவை வருமானமாக இனங் காணப்படாமல் பெறுமானத்தெய்வு கணக்கிடப்பட்ட அடிப்படையில் விரிவான வருமான கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் ஆண்டில் கிடைத்த மூலதன மொத்த தொகையும் விரிவான வருமான கூற்றில் ஒரே தடவையில் வருமானமாக இனங் காணப்பட்டிருந்தது.	இணங்குவதாக.	உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் கடன்பட்டோரிடமிருந்து அறவிட முடியாத ரூபா. 2,257,554 பெறுமதியான 06 மீதிகள் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	குறித்த சீராக்கங்களை செய்வதாக.	.சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	வெவ்வேறு காரணங்களின் பெயரில் கடன் கொடுத்தோருக்கு கொடுப்பனவு செய்ய முடியாத ரூபா. 2,280,719 பெறுமதியான மீதிகளை பதிவழிக்காமல் கடன் கொடுத்தோரின் தொடர்ந்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக.	மீதிகளை உறுதிப்படுத்தாத கடன் கொடுத்தோர் கணக்கு தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீள் கொடுப்பனவு செய்வதற்கு தேவையற்ற ரூபா. 571,486 பெறுமதியான 10 மீதிகள் திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யாமல் 2017 ஆம் ஆண்டு முதல் வைப்புக் கணக்கில் பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் குறைத்தும் வைப்புக்கணக்கு அப்பெறுமானத்தால் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்
(ஈ)	பாலங்கள், மதகுகள் ஒழுங்கைகளின் கீழ் கணக்கீடு செய்ய முடியாத குருணிக்கல் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்குரிய ரூபா 1,481,756 தொகை மற்றும் அட்டவணையில் இரண்டு முறை பதிவு செய்யப்பட்ட 06 வீதிகளுக்குரிய ரூபா. 4,519,123 என மொத்தம் ரூபா. 6,000,879 ஆன பாலங்களும் மதகுகள் ஒழுங்கைகளின் கீழ் கூடுதலாக காண்பிக்கப்பட்டது.	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்

(உ)	மீளாய்வாண்டில் மொத்த வருடாந்த பெறுமான தேய்வு பெறுமதி ரூபா. 2,668,820 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் போது ரூபா. 1,070,607 ஆன கட்டிடம் திருத்தமென்றின் பெறுமதி பாலங்கள் மதகுகள் ஒழுங்கைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(எ)	கல்லேல்ல புதிய மாடுகள் கொல்லுமிடம் பயன்படுத்தலின் நிலுவை வருமானம் ரூபா. 148,800 நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக்.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஏ)	மீலாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித வைப்புகள் மீதி ரூபா. 6,651,392 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக்.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஐ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது களஞ்சிய மீதி ரூபா. 898,160 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஒ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 உருப்படிகளுக்குரிய ரூபா. 240,530 தொகை அலுவலக உபகரணங்கள் மீதி ஒன்று விடுபட்டு இருந்தது.	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவேடுகளிள் பிரகாரம் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய நடமாடும் விற்பனை கூட வருமானம் மற்றும் தாமத கட்டணங்கள் ரூபா. 132,100 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஔ)	மீளாய்வான்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை சொத்துக்கள் குத்தகை வழங்கல் பெறுமதி மற்றும் தாமத கட்டணங்கள் ரூபா. 950,730 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை	உரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக.	சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப நாட்குறிப்பு பதிவின் பிரகாரம் இடையே ரூபா 2,842,914 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது.	உரிய சீராக்கங்களை மேற்கொண்டு சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக.	கணக்கு புத்தகங்கள் ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதிகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்து மூலமாக சான்றிதழ் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
ரூபா. 36,746,211 ஆன 5 கணக்கு விடயங்களுக்குரிய வங்கி இணக்க கூற்றுகள், வங்கி கூற்றுகள் மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படா மையால் அக்கணக்கு மீதிகளை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதது.	நீண்டகாலமாக இருந்து வரும் வங்கி மீதியாக் இருந்து வருவதுடன் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அட்டவணைகளைச் சமர்ப்பதாகவும்.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 <u>இணக்கமின்மைகள்</u>

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மான களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2009 ஏப்ரல் 17 ஆம் திகதி 1597/8 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி	2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான 106 கட்டிட அனுமதிபத்திரங்களுக்குகு அங்கீகாரம் வழங்கப் பட்டிருந்த போதும் 75 விண்ணப்பங்களுக்காக இனக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டு இருக்கவில்லை.	எழுத்து மூலம் அறிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாக. .	இணக்கச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும.
(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம்			
	104 (3) மற்றும் 104 (4)	மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய கடமைகளை மேற்கொள்ளும் போது டிபர் வண்டியின் தட்டு வளைந்த காரணத்தினால் இடம்பெற்ற ரூபா. 186,500 ஆன நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஆரம்ப புலனாய்விற்காக குழுவொன்று பெரிடப்பட்டுள்ள துடன் 104 (3) பிரகாரம் ஆரம்ப பரிசோதனை அறிக்கை சபைக்கு இதுவரை கிடைக்கவில்லை என்பதாக.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) சுற்றறிக்கை

2016 திசெம்பர் 29 ஆம் திகதி 30/2016ம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை	பிரதேச சபையின் 08 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 84,003,120 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,719,241 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	1,330,529	1,459,046	1,970,579	1,535,118	1,469,842	2,167,668	2,645,906	1,288,958
(ii)	வாடகை	9,794,300	11,706,801	15,085,122	907,507	5,970,935	3,844,449	3,660,616	1,303,333
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்	368,250	792,967	812,516	56,700	269,250	375,063	360,813	46,250
(iv)	ஏனைய வருமானம்	2,222,970	3,974,052	3,934,552	1,136,471	75,086,430	39,238,000	71,762,246	12,817,320
	மொத்தம்	13,716,049	17,932,866	21,802,769	3,635,796	82,796,457	45,625,180	78,429,581	15,455,861

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**வீத வரி மற்றும் வரிகள்**		
(i)	மீளாய்வாண்டின் இறுதி திகதியின் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி வருமானம் ரூபா. 1,248,864 ஆக இருந்ததுடன் ரூபா 926,514 முன்னைய ஆண்டுக்காக அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 430,368 ஆக இருந்த போதும் அதில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 91,944 அதாவது 21 வகையான குறைந்த அளவு ஒன்றே எடுத்து இருந்தது	2025 ஆம் ஆண்டின் போது சட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடுப்பதாக.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	முன்னைய ஆண்டுக்காக அறவிடப்பட வேண்டிய நிர்மாண மற்றும் வியாபார வரி நிலுவை வருமானம் ரூபா 777,110 ஆக இருந்தது.	பதில் அளிக்கப்படவில்லை.	வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	2018 ஆம் ஆண்டு தமன்கடுவ பிரதேச சபை கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அறவிடுவதற்காக பொலன்னறுவை பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா. 557,500 நிலுவை கழிவுப்பொருள் வருமானத்தை 06 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பதில் அளிக்கப்படவில்லை .	வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தால் வேண்டும்.
(ஆ)	**வாடகை**		
	மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கடை வாடகையாக முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 278,717 அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் ரூபா. 81,900 ஆன வாகன மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமைக்காக அறவிடுவதற்கு காணப்பட்டது	அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும.
(இ)	**நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள்**		
	மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தாக காண்பிக்கப்பட்டிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 59,028,305 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா. 25,941,750 ஆக இருந்தது.	செயற்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக.	குறிப்பிட்ட வருமானத்தை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஈ) **ஏனைய வருமானம்**

05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா. 174,321 நிலுவை நீர் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	நிலுவை வருமானத்தை அதை விடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதாக.	வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

.3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
.பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 23 நிறைவேற்றுவதற்காக உப உறுப்புரை பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 09 பிரதான விடயங்களுக்காக உப விதி பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தயாரித்துக் கொள்தாக.	உப உறுப்புரை பிறப்பிக்கப்பட்டு சபையில் நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
உழவு இயந்திரம், நீர் பவுசர் மற்றும் புல் வெட்டும் கை உழவு இயந்திரம் முறையே 2015, 2018 ஆம் ஆண்டு முதல் செயற்பாடு அற்று வகையில் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் பொருத்தமான வகையில் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உழவு இயந்திரம், நீர் பவுசர் மற்றும் புல் வெட்டும் கைஉழவு இயந்திரம் என்பவற்றை கைதவிப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக	பொருத்தமான வகையில் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபையால் பயன்படுத்தப்படும் ரூபா 27,290,532 பெறுமதியான அலுவலகங்கள் நூலகங்கள், மயானங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைந்துள்ள 35 காணிகளின் உரித்தைப் பெறுவதற்கு	சொத்துக்களைக் கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவாக.	உரித்தைப் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	பிரதேச சபைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	மோட்டார் கிரேடர் பிரதேச சபைக்கு கிடைத்து 4 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் ஆனால் அது பதிவு செய்யப்படாமல் இயக்கப்பட்டு வந்தது	மோட்டார் கிரேடர் சபைக்கு வழங்கப்பட்ட போது, அதன் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்பதாக.	அதைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடு உடைய ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமான ரூபா 9,086,611 பெறுமதியான 03 சொத்துக்கள் பல்வேறு காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் விளைவற்று இருந்தன.	2025 ஆம் ஆண்டு முதல் அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	சொத்துக்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும.

3.5 செயற்திட்டங்கள், பணிகள் அல்லது மூலதனப் பணிகளில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருந்த பாதீட்டு திட்டங்களின் கீழ், ரூபா 6,000,000 ஒதுக்கப்பட்டு வீதிகள், மதகுகள், வாகன நிறுத்துமிடம், கழிவறை, மயானங்கள், வடிகால் அமைப்பு நிர்மாணம் மற்றும் 17 பராமரிப்பு பணிகள் திட்டமிடப்பட்டு இருந்த போதும் அவை மீளாய்வாண்டின் போதும் செயறபடுத்தப்படவில்லை	2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக.	திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

3.6 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்,, முகாமைத்துவ உதவியாளர், நூலகர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர உள்ளிட்ட 14 பதவிகளுக்கு 30 வெற்றிடங்கள் காணப்பட்டன, அதே நேரத்தில் அலுவலக உதவியாளர் மற்றும் காவலாளி பதவிகளுக்கு 04 ஊழியர்கள் மிகையாக இருந்தனர்.	ஊழியர் வெற்றிடங்கள் தொடர்பில் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக.	வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகை ஊழியர்களுக்கும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.
(ஆ)	பிரதேச சபையில் வீதிப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், நூலக உதவியாளர்கள் ஆகிய	இது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக.	வழக்கமான பதவிகளில் பணியமர்த்தப்பட வேண்டும்.

பதவிகளில் பணியாற்றும் 17 உத்தியோகத்தர்கள் தமது நிரந்தர பதவிக்கு உரியதல்லாத விடய அலுவலர்கள் ஓட்டுநர்கள் மற்றும் காவலர்கள், நூலகர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் போன்ற பிற பதவிகளில் 1 வருடம் முதல் 18 ஆண்டுகள் வரை கடமைகளைச் நிறைவேற்றி வருகின்றனர்.

.4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக சபையின் பாதீடு செய்யப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்கள் மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றம் செலவினங்ளுக்கு இடையே ஒப்பிடும் போது 05 வருமான விடயங்களில் 10 சதவீதம் முதல் 115 சதவீதம் வரையிலும் 06 செலவின விடயங்களில் 06 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி வழிகாட்டலொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக .	பாதீட்டு நடைமுறைச் சாத்தியமாக ஆக்கபூர்வமான நிதி வழிகாட்டலொன்றாக பயன்படுத்தப்ப வேண்டும்.

4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஒழுங்குபடுத்தலின் பிரகாரம் பிரதேச சபையால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிகழ்ச்சிகள் மற்றும் நியதிகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தல் இடம்பெற்றிருருக்கவில்லை.	மீளாய்வாண்டில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிகழ்ச்சிகள் இனங்காணப்பட்டுள்ளதாக.	சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.